பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 26 வெள்ளிக்கிழமை 09.02.2024 அதிர்வு 193


## அதிக மின்சாரக் கட்டணம் அறவிடும் நாடாக இலங்கை



தெற்காசியாவிலேயே அதிக மின்சாரக் கட்டணம் இலங்கையிலேயே அறவிடப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

04





# அநுரவின் கட்சி ரணில் அரசுக்கு ஆதரவு வழங்கும்

### ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் இந்திய விஜயம் வரவேற்கத்தக்கது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். அத்துடன் அநுரகுமாரவின் கட்சி, தற்போதைய ரணில் அரசுடன் இணைந்து செயற்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

04



### கொழும்பில் வீடொன்றில் இருந்து

## இரு வயோதிபர்கள் சடலங்களாக மீட்பு!

### பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பில் வீடொன்றில் இருந்து இரண்டு வயோதிபர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மிரிஹானை, ஜூபிலி மாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே இன்று இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

04



### கழுத்தை நெரித்து

## மனைவியைக் கொடூரமாக கொலை செய்த கணவன்!

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கணவன் கழுத்து நெரித்துப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரான 33 வயதுடைய கணவர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



மனைவியின் ஆடையின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி அவரின் கழுத்தைக் கணவன் நெரித்துக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். வந்தார் தமன்னா




(எஸ்.நிதர்ஷன்)

பிரபல தென்னிந்திய நடிகை தமன்னா, நகைச்சுவை நடிகர்களான யோகி பாபு, புகழ் உள்ளிட்டவர்கள் இன்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

பிரபல தென்னிந்தியப் பாடகர் ஹறிகரனின் இசை நிகழ்வு யாழ்ப்பாணம் – முற்றவெளி மைதானத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள நிலையில் தென்னிந்தியக் கலைஞர்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்நிலையில், நடிகை தமன்னா உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இன்று மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோது சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

மேற்படி இசை நிகழ்ச்சியை முன்னிட்டு பாடகர் ஹறிஹறரன், நடிகை ரம்பா, நடன இயக்குநர் கலா மாஸ்டர் மற்றும் சிவா, பாலா, சாண்டி மாஸ்டர், ஐஸ்வர்யா ராஜேஷ், திவ்ய தர்சினி, ஆல்யமானசா, நந்தினி, மகாலட்சுமி உள்ளிட்ட கலைஞர்கள் பலர் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.











# ஸ்ரீ லங்கா ரெலிகொம் விற்பனையால் தேசியப் பாதுகாப்புக்குப் பெரும் பாதிப்பு!

## அரசு பொறுப்புக் கூறுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் போன்ற தேசிய பாதுகாப்புடன் தொடர்பான நிறுவனங்களின் விற்பனையால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்புக்கு அரசு பொறுப்புக் கூறுமா?

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இன்று (09) கேள்வி எழுப்பியுள்ளார்.

நிலையியற் கட்டளைகள் 27(2)இன் கீழ் இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நஷ்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் புதிய முகாமைத்துவ திட்டத்தின் அடிப்படையில் தற்போது இலாபம் ஈட்டும் நிறுவனங்களின் செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பது மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும் என்றாலும் இலாபம் ஈட்டும் நிறுவனங்களை அதிக இலாபம் ஈட்டக் கூடிய முறைமைக்குச் செல்ல வேண்டும். பொது நிறுவனங்களின் மறுசீரமைப்புக்காக அமைக்கப்பட்ட அலகு மூலம், ரெலிகாம் மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனம் உட்பட அவர்களின் கட்டுப் பாட்டில் உள்ள நிறுவனங்களை மறு சீரமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தால், குறித்த அறிக்கையை சபையில் சமர்ப்பியுங்கள்.

ரெலிக்காம் நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்வதற்கான ஏலத்தை சமர்ப்பித்த நிறுவனங்கள், அவர்களின் தகுதி மற்றும் ரெலிகொம் நிறுவனத்தின் சொத்துக்கள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தால் அந்த அறிக்கையையும் சபையில் முன்வையுங்கள்.

இந்த அறிக்கையை நாட்டுக்கு வெளிப்படுத்தாது மறைத்து வைத்திருக்க வேண்டாம். தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் 09.06.2023 திகதியிட்ட அறிக்கையின் பிரகாரம், ரெலிக்கொம் நிறுவனத்தை மேலும் தனியார்மயமாக்குவது தேசிய பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரெலிக்கொம் நிறுவனத்தின் உரிமையை அரசிடம் இருந்து வெளி நிறுவனத்துக்கு மறுசீரமைப்பதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசு பொறுப்புக் கூறுமா?

காப்புறுதி கூட்டுத்தாபனத்தை தனியார்மயமாக்கிய பிறகு கிடைத்த இலாபத்தை விட, அரச உடைமையின் போது அதிக இலாபம் ஈட்டியுள்ளமை இராஜாங்க நிதி அமைச்சின் இலாப நஷ்ட அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. எனவே இதன் பின்னணியில் உள்ள காரணங்கள் தெரிய வேண்டும் .நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 8 பில்லியன் பெறுமதியான விசுபம்பாய சொத்துக்களை 4 பில்லியனுக்கு விற்கத் தயாராகி வருகின்றனர். இதற்காக ஒரு பகுதியை குறைந்த விலைக்கு விற்க தனித் தரகர்கள் தயாராக உள்ளனர். இவ்வாறு குறைந்த பெறுமதிக்கு ஏன் விற்பனை செய்கிறீர்கள்.– என்றார்.

# தெஹிவளையில் கும்பாபிஷேகம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு,தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் 'ஸ்ரீசிவன்' நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் தைத் திங்கள் 28 ஆம் நாள் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.55 இலிருந்து 11.02 வரை ஸ்ரீ சிவன் நூதன பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது. தைத்திங்கள் 27 ஆம் நாள் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணைக்காப்பு சாத்தும்நிகழ்வு காலை 9 மணி யிலிருந்து நடைபெறவுள்ளது.



# யாழ். மாநகர சபைக்குப் புதிய ஆணையாளர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய ஆணையாளராக ச.கிருஸ்னேந்திரன் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளராக 7 ஆண்டுகள் பதவி வகித்த த.ஜெயசீலன் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட நிலைநில் மாநகர சபையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ச.கிருஸ்னேந்திரன் நியமிக்கப்பட்டார். அவர் இன்று காலை 9 மணிக்குக் கடமையைப் பொறுப்பேற்றார்.

பூநகரி மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேசங்களில் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய கிருஸ்னேந்திரன், இவ்வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி முதல் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்ற நிலையில் இன்று யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளராகப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, யாழ். மாநகர முன்னாள் ஆணையாளர் த.ஜெயசீலன் இன்று பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளராகப் பதவியேற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அநுரவின் கட்சி...

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

“தேசிய மக்கள் சக்தி, உலகத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவது நல்ல விடயமாகும்.

நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தமது பங்களிப்பை வழங்கும்.

இது புதிய விடயம் ஒன்றல்ல. கடந்த காலத்திலும் தேசிய மக்கள் சக்தியான ஜே.வி.பி. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசுடன் இணைந்து பணியாற்றியுள்ளது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசுக்கு ஜே.வி.பி ஆதரவு வழங்கியுள்ளது.

அந்தவகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கும் ஜே.வி.பியின் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கும்.” - என்றார்.

இதேவேளை, இந்தியாவுக்கான விஜயம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அங்கு பல தரப்பினரையும் சந்தித்து வருவதுடன் பல நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

### இரு வயோதிபர்கள்...

அயலவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

80 வயதுடைய ஆணும், 96 வயதுடைய பெண்ணும் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இரண்டு சடலங்களும் பிரேத பரிசோதனைகளுக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வயோதிபர்கள் கொலை செய்யப்பட்டார்களா? அல்லது இயற்கை மரணமா? என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### அதிக மின்சார...

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மின்சாரக் கட்டணம் 3 மடங்கு அதிகமாக உள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இலங்கைக்கு அடுத்ததாக தெற்காசியாவின் அதிக மின் கட்டணம் வசூலிக்கும் நாடாக பாகிஸ்தான் காணப்படுகின்றது.

எனினும், இலங்கையுடன் ஒப்பிடும் போது குறித்த கட்டணம் மிகவும் குறைவாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

100 அலகுகளை நுகரும் இலங்கையிலுள்ள வீடொன்று செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம், அதே அலகுகளைப் பயன்படுத்தும் பாகிஸ்தான் வீடுகளில் அறவிடப்படும் கட்டணங்களை விட 50 சதவீதம் அதிகம் என்றும் கூறப்படுகின்றது.

# சுகாதாரத்துறையின் மேம்பாட்டுக்கு ஊடகவியலாளர் பங்களிப்பு அவசியம்

## வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் தெரிவிப்பு

(அபு அலா)

சுகாதாரத் துறையின் மேம்பாட்டுக்கு ஊடகவியலாளர்களது பங்களிப்பு அவசியம் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று கல்முனையில் இடம்பெற்றது. இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர் கலந்து கொண்டார்.

இங்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,

இந்தப் பிராந்தியத்தில் பாதுகாப்பான, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.



மக்கள் சுகாதாரத் துறையினருக்கு முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கும்போதுதான் மேம்பட்ட சுகாதார சேவைகளை எமது பிராந்தியத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

கடந்த காலத்தில் குறிப்பாக கொரோனா காலத்தில் இரவு பகலாக ஊடகவியலாளர்கள் பணியாற்றியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எமது பிராந்திய சுகாதாரத் துறையின் முன்னேற்றத்துக்காக ஊடகவியலாளர்களின் ஆரோக்கியமான கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம்.

சுகாதார மேம்பாட்டை முன்னெடுப்பதில் பல சவால்களும் உள்ளன. அந்த சவால்களை வெற்றிகொள்ள மக்களை விழிப்பூட்டுவதற்காக ஊடகவிய லாளர்கள் சிரத்தையுடன் பணியாற்ற வேண்டும்.

சுகாதாரத்துறையின் எழுச்சிக்காக பல்வேறு தரப்பினருடனும் தொடரான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில்தான் பெறுமதிமிக்க ஊடகவியலாளர்களையும் சந்திக்கின்றோம்.- என்றார்.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் சுகாதாரத்துறை சம்பந்தமான தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.





# பாலஸ்தீனத்துக்குச் சுதந்திரம் வேண்டி அம்பாறையில் பாலமுனையில் மரதன்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை, பாலமுனையில் அஸ்லம் குளோபல் லங்கா நிறு வனத்தின் அனுசரணையில் பாலமுனை ரைஸ்டார் விளையாட்டுக் கழகத் தலைவர் ஐ.எல்.எம்.பாயிஸ் தலைமையில் 'பாலஸ்தீனத்துக்குச் சுதந்திரம் கிடைக்கப்பெற வேண்டும்' என்ற தொனிப்பொருளில் மரதன் ஓட்ட நிகழ்வு பிரதான வீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கழகத்தின் ஆலோசகர்களான எம்.எம். முஸம்மில் (இறைவரி திணைக்கள உதவி ஆணையாளர்), முன்னாள் தலைவரும் ஆலோசகருமான சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், முன்னாள் முகாமையாளர், ஆலோசகர் எம்.எஸ்.எம்.இப்றாகிம் ,முன்னாள் தலைவர் எம்.ஐ.எம்.மனாப் , நிர்வாக உறுப்பினர் எம்.எப்.பர்ஹான் (கணக்காளர்), நிர்வாக உறுப்பினர், முன்னாள் தலைவர் எம்.எப்.பர்ஷாத் , அஸ்லம் குளோபல் லங்கா




நிறுவன பிரதிநிதி அஸ்லம் அஸ்ரிப், உப தலைவர் சட்டத்தரணி வை.எம்.அஸாம், நிர்வாக உறுப்பினர் எம்.ஏ.ஜுபான், ஐ.எல். இஸ்மத், செயலாளர் சிபான் அஸீஸ், பொருளாளர் ஐ.எம். ஹம்தான், விளையாட்டுக் குழுத் தலைவர் ஏ.ஆர். சிஹாப், நிர்வாக உறுப்பினர் எம்.ஏ. றினாஸ், நிர்வாக உறுப்பினர் யூ.எல். அலீம், தொழிலதிபர் எச். ஹஸ்ஸாலி, சிரேஷ்ட வீரர்களான எஸ்.அர்சாத், எச். றுகைமி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து வெற்றிக் கேடயங்களை வழங்கினர்.

மரதன் ஒட்டப் போட்டியில் ஏ.எம். சனூஸ் முதலாம் இடத்தையும், என். எம்.உசாமா இரண்டாம் இடத்தையும், என்.நஸீல் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் அலங்கோலம்

தேர்தல்கள் தொடர்பான விடயங்களை - விதிமுறைகளை - சட்டங்களை - ஏற்பாடுகளை - தமக்கு ஏற்ற முறையில் மாற்றுவதில் பெரும் கில்லாடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலைத் தாம் தலையிடாதவர் மாதிரிக் காட்டிக் கொண்டே, ஓராண்டாக நடத்த விடாமல் தடுத்து வைத்திருப்பவர் அவர்தான். அந்த வேட்பு மனுக்களும், தேர்தல் அறிவிப்பும் இன்னும் செல்லுபடியானவையா என்று கூடத் தெரியாமல், விவகாரம் திரிசங்கு சொர்க்க நிலையில் தொங்கிக் கிடக்க வைத்து, தந்திரம் செய்பவர் அவர்.

மாகாண சபைத் தேர்தல்களையே நடத்த முடியாமல் பண்ணியமை மூலம் சத்தம்சந்தடி, ஆரவாரம் இல்லாமல் அரசமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்ட ஏற்பாடுகளையே உறை நிலைக்குக் கொண்டு சென்றிருக்கும் பெரும் தந்திரசாலி அவர்தான்.

நாட்டில் தேசிய ரீதியான தேர்தல்கள் காலக் கிரமப்படி நடக்க வேண்டும் என்று அரசமைப்பு வலியுறுத்துகின்றது. சுயாதீனமானவையாகவும், பிற தலையீடுகள் இன்றியும், இந்தத் தேர்தல்கள் சுதந்திரமாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காக - அந்தச் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக - அரசமைப்புக்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் மூலம் அந்த விடயம் சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனாலும், அந்த அரசமைப்பு ஏற்பாடுகளுக்கும் 'டிமிக்கி' கொடுத்து விட்டு, தனது நரி தந்திரம் மூலம் அதில் தலையிட்டுக் கையாளும் வேலையை கனகச்சிதமாக முன்னெடுக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவரின் இடத்துக்கு பதில் ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் எதுவும் இல்லை என்பதுதான் அரசமைப்பு ஏற்பாடு.

ஆனால் இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்று அறிவிப்பதன் மூலம் ஏதோ அந்த விடயத்தைத் தீர்மானிக்கின்றவர் தாமே என்று நடிப்பு - பாவ்லா - காட்டுகின்றார் அவர்.

அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளின்படி, கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதியின் ஐந்து வருடப் பதவிக்காலத்தின் முடிவுக்கு இரண்டு முதல் ஒரு மாத காலத்துக்கு இடைப்பட்ட ஒரு வேளையில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். அதன்படி 2019 நவம்பர் 17ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக்காலம் ஆரம்பித்தபடியால் வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு நாளில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவால் நடத்தப்பட்டாக வேண்டும். அந்தத் திகதியைத் தீர்மானிப்பதில் கூட தற்போதைய ஜனாதிபதிக்கு அதிகாரம் ஏதும் கிடையாது. விரும்பினால் தாமும் வேட்பு மனுத் தாக்கல் செய்து அவரும் அத்தேர்தலில் போட்டியிடலாம். அந்த உரித்துத் தவிர, இதில் வேறு அதிகாரம் ஏதும் அவருக்குக் கிடையாது.

ஆயினும், இந்தத் தேர்தலை இலக்கு வைத்து அரச நிதியைப் பயன்படுத்தி பல அபிவிருத்தித் திட்டங்களை அரசு மும்முரமாக ஆரம்பித்திருக்கின்றது என்றும் -

அவற்றை வரும் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் அவசர அவசரமாக முடிவுறுத்தும்படி அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது என்றும் -

சுயாதீனமான, நீதியான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கைக் குழுவின் ('பவ்ரல்' அமைப்பின்) நிறைவேற்று இயக்குனர் றொஹான் ஹெட்டியாராய்சி சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் அரச நிதி இப்படிப் பயன்படுத்தப்படுகின்றது. பெருந்தொகை அரச நிதியை இவ்வாறு தேர்தல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துவது மிகப்பெரிய தேர்தல் விதிமுறை மீறல், துஷ்பிரயோகம் என்று அவர் கூறுகின்றமை முற்றிலும் உண்மை.

தேர்தலுக்கு இன்னும் எட்டு மாதங்கள் இதுக்கையிலேயே இத்துணை அதிகாரத் துஷ்பிரயோகங்கள், விதிமுறை மீறல்கள் எல்லாம் சூடாக ஆரம்பித்து விட்டன என்றால், தேர்தல் நெருங்கும் போதும், தேர்தல் நடக்கும் போதும் அவை எவ்வளவு தூரம் எல்லை மீறும் - எகிறும் என்பது கற்பனை பண்ண முடியாததாக இருக்கும்.

வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, ஒரு தொகுதி வாக்கு சீட்டுக்களும் அச்சிடப்பட்ட நிலையில், நிலுவையில் நிற்கும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய மறுத்து நிற்கும் ரணிலின் அரசு -

அந்தத் தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் கொடுத்த வழிகாட்டலைக் கூட சாதகமாகப் பரிசீலிக்காமல் உதாசீனம் செய்யும் ரணிலின் நிர்வாகம் -

ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்துடன் பல்லாயிரம் கோடி ரூபாவை அவசர அவசரமாக அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கச் செலவிடுகின்றது.

இதுதான் இலங்கையின் தேர்தல் அவலம். அலங்கோலம்.



# கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு திருமலையில் வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன், அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான வெகுசன ஊடக அமைச்சால் ஒழுங்கமைக்கப்பட்ட, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் அனுசரணையின் கீழான, வதிவிட பயிற்சிச் செயலமர்வு திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் 50 தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் இந்தச் செயலமர்வில் பங்குபற்றினர்.

நிகழ்வு வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுச பலபிட்டவின் அறிமுகவுரையுடன் ஆரம்பமானது.

இரு நாள் செயலமர்வில் வளவாளர்களாக கிழக்குப் பல்கலைக்கழகத் தொடர்பூடக மற்றும் மொழித்துறைப் பிரிவின் தலைவர் கலாநிதி வீ.ஜே.நவீன்ராஜ், சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைவர் சுதர்சன குணவர்த்தன, வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் கே.எல். விஜேநாயக்க, சன்டே பத்திரிகையின் பிரதான ஆசிரியர் மந்தனா இஸ்மாயில், ஊடக அமைச்சின் பணிப்பாளர் டபிள்யூ.எஸ்.செவ்வந்தி, தகவல் அறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி ஜெகத் லியனாராச்சி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் அலுவலர்களான யுரேக்கா வேலரத்தன, கே.பி.ஜெயந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.








# உதவி தேவைப்படுவோரைக் கண்டறிந்து உதவவே ‘உதவும் நுவரெலியா’ திட்டம்

## நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவிப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியா மாவட்டத்தில் உதவி தேவைப்படுபவர்களை உரிய முறையில் கண்டறிந்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதே “உதவும் நுவரெலியா” நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்தார்.

ஹெல்பிங் நுவரெலியா நிகழ்ச்சியின் மற்றுமொரு கட்டத்தை வலப்பனை யதிமதுர ஆரம்ப பாடசாலையில் ஆரம்பித்து வைத்த போதே மாவட்ட செயலாளர் இதனை வலியுறுத்தினார்.

மாவட்டச் செயலாளரின் கருத்தின்படி நுவரெலியா மாவட்ட செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உதவும் நுவரெலியா வேலைத் திட்டம் மாவட்டத்தில் உதவி தேவைப்படும் மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வேலைத் திட்டமாகும்.

வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மிகவும் கடினமான பாடசாலை இதுவாகும், இந்தக் கல்லூரியில் கல்வி கற்கும் சகல சிறார்களுக்கும் புதிய பாடசாலை தவணைக்கு தேவையான புத்தகங்கள் உட்பட பாடசாலை உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டது. இதன் மதிப்பு சுமார் ஐந்து லட்சம் ரூபா

அந்தக் குழந்தைகளின் குடும்பங்களுக்கு கிட்டத்தட்ட 3 லட்சம் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்குப் பங்களிப்புச் செய்திருந்தன.

இந்த நிகழ்வில் நுவரெலியா மேலதிக மாவட்ட செயலாளர் சுஜீவ போதிமான்ன, வலப்பனை பிரதேச செயலாளர் ஷாலிக லிந்த கும்புர மற்றும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.




# ‘போதையற்ற தேசத்தை உருவாக்குவோம்’ எனும் தொனிப்பொருளில் சைக்கிளோட்டம்

**(பாறுக் ஷிஹான்)**

மருதமுனை ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகம் ஏற்பாடு செய்துள்ள, போதையற்ற தேசத்தை உருவாக்குவோம் எனும் தொனிப் பெருளில் பொத்துவில் தொடக்கம் பாசிக்குடா வரைக்குமான விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம் நாளை (10) பொத்துவில் அறுகம்பையில் இருந்து காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு வியாழக்கிழமை (8) இரவு நடைபெற்றது.

இதன் போது பொத்துவில் தொடக்கம் பாசிக்குடா வரைக் குமான சைக்கிளிங் சாலஞ்ச் சார்பான கட்டுமான சர்வதேச தொண்டு நிறுவனத் தலைவர் கலீல் கபூர் , பிரதித் தலைவர் வைத்தியர் ஏ.ஆர்.எம். அஸ்மி, வைத்தியர் ஏ.எஸ். பௌசாட் , நெல்லியடி காப்புறுதி நிறுவன பிராந்திய முகாமையாளர் துரை கோபிநாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.ஏ மலீக், பிரதி செயலாளரும் சிரேஷ்ட பொது சுதாதார பொறுப் பதிகாரியுமான எம்.என்.எம்.பைலான், ஆசிரியர் பரமேஸ் வரன் ஆகியோரும் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர்.





# பூரணப்படுத்தப்படாத நிலையில் உள்ள வீடுகளை சோலர் வீட்டுத்திட்டத்தினுள் உள்வாங்க நடவடிக்கை

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவில் குடியிருப்பு கிராமத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு அரச வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு பின்னர் நிதி விடுவிக்கப்படாமையால் பூரணப்படுத்தப்படாத நிலையில் காணப்படும் 42 வீட்டுத் திட்டப் பயனாளி களது வீடுகளை சோலர் வீட்டுத்திட்டத் துக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது கூட்டத்தில் கலந்து கொண்ட நகரசபை முன்னாள் உறுப்பினர் லலிதாராணி மேற்படி விடயம் தொடர்பாக கூட்டத்துக்குத் தலைமை வகித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவின் கவனததுக்குக் கொண்டு சென்றிருந்தார்.

அதன்போதே அமைச்சர், வீட்டுத் திட்ட நிதி கிடைக்காமையால் வீட்டைக் கட்டி முடிக்க முடியாத நிலையில் உள்ள பயனாளிகளை 50 லட்சம் ரூபா பெறுமதியான சோலர் வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் கடந்த 2016 ஆம் ஆண்டு காணி அற்ற சுமார் 60 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லாத, கடலை மிக அண்மித்த தாழ்வான மகிழங்கேணி பகுதியில் அரச காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலானவர்கள் நகர சபையின் சுகாதார தொழிலாளர்களாக உள்ளனர். இவர்களில் 50 குடும்களுக்கு 2019 இல் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. இருப்பினும் வீட்டுத் திட்ட நிதி முழுமையாக வழங்கப்படாமையால் 42 வீடுகள் முழுமை பெறாத நிலையில் காணப்படுகின்றன.

கடல் பரப்பை விட தாழ்வான பகுதியாக காணப்படுவதால் இலகுவாக இவர்களுடைய குடியிருப்புக்குள் வெள்ளம் தேங்கி விடுகிறது. எனவே இவர்கள் குடியிருக்கும் பகுதியை மணல் இட்டு உயர்ந்த வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது.

மக்கள் மேற்படி பகுதியில் காணியைக் கோரி இருந்தாலும் பொறுப்பு வாய்ந்த திணைக்களம் என்ற வகையில் பிரதேச செயலகம் இலகுவில் அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய இடத்தில் காணி பகிர்ந்தளித்திருக்கக் கூடாது என்று மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.




# உலக புற்று நோய் தினத்தை முன்னிட்டு கொக்கட்டிச்சோலையில் விழிப்பூட்டல்

(வவுணதீவு)

உலக புற்று நோய் தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு மாவட்டம் மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் பிரதேச மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (09) இடம் பெற்றது.

மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பட்டிப்பளை பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வைத்தியர் ரமேஸ் தலைமையிலான ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

மகிழடித்தீவு வைத்தியசாலையில் ஆரம்பமான இந்த நிகழ்வு, கொக்கட்டிச்சோலை பிரதான வீதி வழியாக நடைபவனியாக இடம்பெற்றத.

ஒலி பெருக்கி ஊடாகவும் பதாதைகள் ஊடாகவும் புற்று நோய்த் தாக்கம் தொடர்பில் விழிப்பூட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபவனி, மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்தை சென்றடைந்து அங்கு பொது மக்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கும் இடம் பெற்றது.



# மருதமுனை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அல் – ஹம்றா வித்தியாலய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

நாட்டின் 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட ஒன்று தொடக்கம் தரம் ஐந்துவரை கல்வி பயிலும் தேவையுடைய மாணவர்களுக்கு கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அனுசரணையில் இந்த கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளை வழங்கினார்.



இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஏ.எல்.எம்.முஸ்தபா (ஷரீப்), எம்.எஸ். உமர் அலி, எம்.ஐ.எம். ராஜாப்டீன், பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எஸ்.கே.வீரசிங்க, பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பகுதி தலைவர்கள், பெற்றோர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.

# கல்முனை பஹ்ரியாவுக்கு விளையாட்டு உபகரணம்

(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை கல்வி வலய அல்- பஹ்ரியா மகா வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் பைசால் தலைமையில் விளையாட்டு அபிவிருத்தி மேம்பாடு, உடற்கட்டமைப்பு வளர்ச்சித் திறன் அபிவிருத்தி போன்ற நோக்கங்களுக்காக உடல் வலுவூட்டல் உபகரணங்கள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.



இந்த நிகழ்வில் பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர் யூ.எல். சிபான், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம்.ஏ.எம் ரியால், ஏ.டபிள்யூ அசாட்கான் மற்றும் பிரிலியண்ட் விளையாட்டுக் கழக தலைவரும், கல்முனை 12 ஆம் வட்டார அமைப்பாளருமான எம்.எஸ்.எம் பழீல், பிரிலியண்ட் விளையாட்டுக் கழக செயலாளர் எஸ்.டி.எம் பஸ்வாக், பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.எம் ஹாஜா, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் ஏ.எல்.எம் நபீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் திண்மக்கழிவு சிரமதானத்தில் சேகரிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆறு மற்றும் குளங்களிலுள்ள நீர் கடலில் கலந்ததன் காரணமாக கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் போன்ற உக்காத திண்மக் கழிவுகள் பெருமளவில் சேர்ந்து காணப்பட்டன.

இதன் காரணமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவோரும், பொழுது போக்குக்காகக் கடற்கரையோரங்களுக்கு செல்வோரும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கல்முனை இளைஞர் அமைப்பும் பிரதேச மக்களும் விஷ்ணு கோயிலுக்கு முன்பாக சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பெண்கள் சிலர் கையில் பதாதைகளை ஏந்திச் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.






# கொழும்பில் நாளை நீர்வெட்டு!

(கே. எ. ஹமீட்)

கொழும்பில் சில பகுதிகளில் நாளைய தினம் 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

நாளை (10) மாலை 05 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணி வரை இந்த நீர்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்று நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.



அதன்படி, கொழும்பு 11,12, 13, 14, மற்றும் 15 ஆகிய பிரதேசங்களுக்கு இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பத்தல நீர் விநியோக திருத்தப் பணிகள் காரணமாக நீர் விநியோகம் இடைநிறுத்தப்படுகிறது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.



# சாய்ந்தமருதில் ஐம்பெரும் விழா

(அஸ்ஹர்இப்றாஹிம்)

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் ஐம்பெரும் விழா அண்மையில் இடம்பெற்றது.

இதில் கணிதப் பூங்கா திறத்தல், சிறுவர் பூங்கா திறத்தல், வைபவ ரீதியான உயர்தர கலைப்பிரிவு ஆரம்பித்தல், பாடசாலை உத்தியோக பூர்வ இணையத்தளம் ஆரம்பித்தல் மற்றும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை 2022 (2023) முடிவுகளின் அடிப்படையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களை கௌரவித்தல் என்பன இந்த ஐம்பெரும் விழாக்களில் இடம்பெற்றிருந்தன.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி கல்முனை கல்வி வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பீ.ஜிஹானா ஆலிப், கணித பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரும் காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ. சஞ்சீவன், கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம். ஆரிப், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எம்.ஐ.எம். றியாஸ், அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் இஸ்ஸத், பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு 'கையில காசு' நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூட உத்தியோகத்தர் ஹாரூனால் பணப் பரிசில்கள் வழங்கப்பட்டது.









# மன்னார் பொது வைத்தியசாலையில் நவீனப்படுத்தப்பட்ட மகப்பேற்று வாட்டுகள்

## இன்று திறந்து வைக்கப்பட்டன

(வாஸ் கூஞ்ஞ)

பிரிட்டனில் புலம் பெயர்ந்து வாழும், பிரிட்டன் மன்னார் நலன்புரி நிதி அனுசரணையுடன் 38 மில்லியன் ரூபா செலவில் உயர்தர வசதிகளுடன் மன்னார் பொது வைத்தியசாலையிலுள்ள மகப்பேற்று வார்ட்டுகள் புனரமைப்பு செய்யப்பட்டு அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுடள்ளன.

இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (09) மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த திகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்து கொண்டார்.

பிரிட்டனில் புலம் பெயர்ந்து வாழும் மன்னார் மக்களாகிய மன்னார் நலன்புரி சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் புலம் பெயர்ந்து வாழும் மன்னார் நலன்புரி சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மகப்பேற்று வாட்டில் இருந்த பிள்ளைகளுக்கான பொருள்கள், பொதிகளும் ஆளுநராலும் அதிதிகளாலும் வழங்கப்பட்டன.













# தமிழகத்தில் இண்டியா கூட்டணி 39 இடங்களிலும் வெற்றிபெறும்

## கணிப்பில் தகவல்

மக்களவை தேர்தலில் தமிழகத்தில் இண்டியா கூட்டணி 39 இடங்களிலும் வெல்லும் என்று ‘இந்தியா ருடே’ நடத்திய தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் மோடி அலை வீசுவதாகவும், 3 ஆவது முறையாக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று மோடி பிரதமராவார் எனவும் பெரும்பாலானோர் மத்தியில் கருத்து நிலவுகிறது.

இந்த நிலையில், ‘இந்தியா ருடே’ குழுமம் சார்பில் தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்பை கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி முதல் ஜனவரி 28 ஆம் திகதி வரை அனைத்து மக்களவை தொகுதிகளிலும் நடத்தியுள்ளது. இதில் பல்வேறு தரப்பட்ட 35 ஆயிரத்து 801 பேரிடம் கருத்துகளை கேட்டறிந்துள்ளது.

இந்த கருத்துக்கணிப்பில் எதிர்வரும் மக்களவை தேர்தலில் இண்டியா கூட்டணி தமிழகத்தில் 39 இடங்களிலும் வெல்லும் என குறிப்பிட்டுள்ளது. மேலும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் ஏனைய கூட்டணிகள் ஒரு இடத்தில் கூட வெற்றி பெறாது என்றும், இண்டியா கூட்டணி 47 சதவீத வாக்குகளையும், தேசிய ஜனநாயக கூட்டணி 15 சதவீத வாக்குகளையும், ஏனைய கூட்டணிகள் 38 சதவீத வாக்குகளையும் பெறும் என கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

# தேசிய கட்சிகளுடன் கூட்டணி கிடையாது: அ.தி.மு.க. பொதுச்செயலாளர் அறிவிப்பு

“தேசிய கட்சிகளுடன் கூட்டணி வைத்துவிட்டால் தேசிய அளவில் பார்வை சென்றுவிடுகிறது. மாநிலத்தின் பிரச்சினையை காது கொடுத்து கேட்பது கிடையாது. தமிழக மக்களுக்கு யார் உதவி செய்கிறார்களோ அவர்களுக்கு பிரச்சினையின் அடிப்படையில் மத்தியில் ஆதரவு கொடுக்கப்படும்.”

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலோசனைக் கூட்டம் சங்ககிரியில் நேற்று நடைபெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. தங்கமணி தலைமை வகித்தார். கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி பங்கேற்றுப் உரையாற்றுகையில்,

“தி.மு.கவோ வாரிசு அரசியல் கட்சி. முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பிறகு, ஏதோ தில்லுமுல்லு செய்து கொல்லைப்புறத்தின் வழியாக ஸ்டாலின் ஆட்சிக்கு வந்துள்ளார். அவருக்குப் பிறகு அவரதுமகன்.

உதயநிதி ஸ்டாலினை விளையாட்டுத் துறை அமைச்சராக்கி முன்னிலைப்படுத்தி வருகின்றனர். ஆனால், அ.தி.மு.கவில் அப்படியில்லை. அ.தி.மு.கவில்தான் ஒருகிளைச் செயலாளர் முதல்வராகவும், பொதுச்செயலாளராகவும் ஆக முடியும்.

தமிழகம் மட்டுமல்ல இந்தியாவில் வேறெந்த கட்சியிலும் இது நடக்காதது, அ.தி.மு.கவில் நடக்கிறது. தேசிய கட்சியுடன் கூட்டணி வைத்துவிட்டால் தேசிய அளவில் பார்வை சென்று விடுகிறது. அவர்கள், மாநிலத்தின் பிரச்சி

(15ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய கட்சிகளுடன் கூட்டணி கிடையாது: அ.தி.மு.க. பொதுச்செயலாளர் அறிவிப்பு

(14ஆம் பக்கம் தொடர்ச்சி)

னையை காது கொடுத்து கேட்பது கிடையாது.தமிழக மக்களின் உரிமைகளை பாதுகாக்க, தேவையான திட்டம், புயல், வெள்ளம், வறட்சி போன்ற காலங்களில் நிதியை பெற்று வர தமிழக மக்களுக்கு யார் உதவி செய்கிறார்களோ அவர்களுக்கு பிரச்சினையின் அடிப்படையில் மத்தியில் ஆதரவு கொடுக்கப்படும். தமிழக மக்களுக்கு பிரச்சினை வரும் போது அதை எடுத்துச் சொன்னால் காது கொடுத்துக் கேட்பது கிடையாது.

அதனால், நாம் பிரிந்து விட்டோம். நமது உரிமைகளை பாதுகாக்க பிரிந்து விட்டோம். தமிழக மக்களின் பிரச்சினையை அ.தி.மு.க. கூட்டணி தீர்த்து வைக்கும். சில பேர் கேட்கின்றனர் எங்கே கூட்டணி என்று. பொறுத்து இருந்து பாருங்கள் அ.தி.மு.க. கூட்டணி சிறப்பான கூட்டணி அமைக்கும்.ஆனால், தி.மு.க, தேசிய அளவில் இண்டியா கூட்டணி என ஒன்றை வைத்துக் கொண்டு ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் செயல்படுகின்றனர்.” – என்றார்.



# பா.ஜ.க - தெலுங்கு தேசம் கூட்டணி: ஆந்திர அரசியலில் திடீர் திருப்பம்

தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு டில்லியில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ.க. தலைவர் ஜெ.பி. நட்டா ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார். இதனால் ஆந்திராவில் பா.ஜ.க. – தெலுங்கு தேசம் கூட்டணி மீண்டும் உருவாகலாம் என்று கூறப்படுகிறது.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலுடன் ஆந்திரசட்டப் பேரவைக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி ஆந்திர அரசியல் கட்சிகள் கூட்டணிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. ஜனசேனா கட்சித் தலைவரும் நடிகருமான பவன் கல்யாணுடன்தான் இம்முறை கூட்டணி என்று சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

இதனால் ஏற்கெனவே ஜனசேனாவுடன் கூட்டணி அமைத்த பா.ஜ.கவின் நிலை என்ன என்ற கேள்வி எழுந்தது. ஆந்திர முதல்வர் ஜெகன்மோகனும் பா.ஜ.கவுக்கு நெருக்கமாக உள்ளார். அவரும் தொடக்கத்தில் இருந்தே மத்திய அரசை பகைத்துக்கொள்ளாமல் அனைத்து மசோதாக்களுக்கும் ஆதரவு அளித்து வந்தார்.

இது பா.ஜ.கவுக்கு சாதகமான விஷயம் தான். ஆனால் ஜெகன்மோகன் ரெட்டி, யாருடனும் கூட்டணி இல்லை என்றுதிட்டவட்டமாகஅறிவித்துவிட்டதால் ஆந்திராவில் மீண்டும் சந்திரபாபு நாயுடுவுடன் கூட்டணி வைக்க பா.ஜ.க. தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

இதனால், பா.ஜ.க. அழைப்பு விடுத்ததன் பேரில் நேற்று முன்தினம் டில்லி சென்ற சந்திரபாபு நாயுடு பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டாவுடன் அன்று இரவு பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பின்னர் இவர்கள் இருவரும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் வீட்டுக்கு சென்று அங்கும் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

இதனால், இம்முறை தெலுங்கு தேசம் – பா.ஜ.க. – ஜனசேனா ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்து ஆந்திராவில் தேர்தலை சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, மறைந்த ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டியின் மகளும் முதல்வர் ஜெகனின் தங்கையுமான ஒய்.எஸ்.ஷர்மிளா, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அவர் ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் ஆந்திராவில் காங்கிரஸார் உற்சாகம் அடைந்துள்ளனர்.

தெலுங்கானா தனி மாநிலம் வழங்கியதால் ஆந்திராவில் தனது செல்வாக்கை இழந்த காங்கிரஸ்/க்கு ஷர்மிளாவின் வருகை புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறலாம். இதனால் பிற கட்சிகளுக்கு சென்ற காங்கிரஸார் மீண்டும் தங்கள் தாய் கட்சியில் இணைய முன்வருகின்றனர். இதனால் இம்முறை ஜெகனின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸின் ஓட்டுகள் காங்கிரஸ/க்கு பிரியும் என அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தெலுங்கு தேசம் கூட்டணிக்கு சாதகமாக அமையும் என்றும் கூறப்படுகிறது. இதற்கிடையே, ஆங்கில நாளிதழ் ஒன்று எடுத்த ஆய்வில் 2024 மக்களவைத் தேர்தலில் ஆந்திராவில் மொத்தமுள்ள 25 மக்களவைத் தொகுதிகளில் 17 தொகுதிகளை தெலுங்கு தேசம் கட்சி கைப்பற்றும் என்றும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் 8 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உத்தராகண்ட்டில் வன்முறை: 2 பேர் பலி; 100 பேர் காயம்!

## இணையசேவை முடக்கம்

உத்தராகண்ட் மாநிலம் நைனிடால் மாவட்டத்தின் ஹல்த்வானி பகுதியில் ஆக்கிரமித்து சட்டவிரோதமாக கட்டப்பட்டு இருந்த மதரஸா இடிப்பு தொடர்பாக வெடித்த வன்முறையில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இதனால் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக அங்கு ஊரடங்கு உத்தரவும், கலவரக்காரர்களை கண்டதும் சுடவும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இணைய சேவையும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து நைனிடால் மாவட்ட ஆட்சியர் வந்தனா சிங் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

“இந்த கலவரத்தில் இதுவரை இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர், அவர்களில் பலர் பொலிஸார். ஹல்த்வானியில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நகரத்தில் இணைய சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. பொலிஸாரும், மாவட்ட நிர்வாகமும் யாரையும் தூண்டிவிடவில்லை, துன்புறுத்தவும் இல்லை என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். உயர்நீதிமன்ற உத்தரவினைத் தொடர்ந்தே ஹல்த்வானி பகுதியில் ஆக்கிரமிப்பை நீக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதில் சிலர் உயர் நீதிமன்றத்தை அணுகி இருந்தனர். சிலருக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. சிலருக்கு அவகாசம் வழங்கப்படவில்லை.

கால அவகாசம் வழங்கப்படாத இடங்களில் பொதுப்பணி துறையினர் மற்றும் நகராட்சியினர் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் ஈடுப்பட்டனர். இது தனிப்பட்ட முறையில் யாருக்குமோ அல்லது சொத்துக்களுக்கு எதிரான செயலோ இல்லை. ஆக்கிரமிப்பு அகற்றம் நடந்த இடம் இரண்டு அடுக்குகளைக் கொண்ட காலி நிலம். அது எந்த மத அமைப்பாகவும் பதிவு செய்யப்படவில்லை அல்லது அப்படியான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அந்த சொத்துக்கள் மீது தடை ஏதும் இல்லாததால் நாங்கள் ஆக்கிரமிப்பு அகற்றதைத் தொடர்ந்து செயல்படுத்த முடிவு செய்தோம்.

பல இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் நடந்து வருவதால், இங்கேயும் நாங்கள் ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளில் ஈடுபட்டோம். ஆக்கிரமிப்பு அகற்றம் யாரையும் காயப்படுத்தவோ, தூண்டிவிடும்படியோ, துன்புறுத்தும் படியோ இல்லாமல் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து விஷயங்களும் சரியான முறையில் செய்யப்பட்டு வந்தன. பாதுகாப்புக்காக போலீஸார் அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர். அப்போது பெரிய கும்பல் வந்து எங்கள் குழுவினரை அரைமணி நேரம் தாக்கியது. நகராட்சி ஊழியர்கள் மீது கற்கள் வீசப்பட்டன. ஆக்கிரமிப்பு அகற்றம் நடக்கும் நாளில் படைகள் மீது தாக்குதல் நடத்துவது திட்டமிடப்பட்டிருக்கிறது. முதல் கும்பல் கற்களை வீசிவிட்டு சென்றது. இரண்டாவதாக வந்த கும்பலிடம் பெட்ரோல் குண்டுகள் இருந்தன. எங்களுடைய குழு எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை.

பன்பூல்புரா பொலிஸ் நிலையத்துக்கு வெளியே சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பொலிஸார் வானை நோக்கி சுட்டனர். கலவரத்தில் இறந்தவர்களை அடையாளம் காணும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இறந்தவர்கள் பொலிஸ் துப்பாக்கி சூட்டில் இறந்தனரா, அவர்கள் சுட்டுக்கொண்டதில் இறந்தனரா என்பது குறித்து விசாரணை நடைபெறுகிறது. கலவரக்காரர்கள் பந்தல்பூரா பொலிஸ் நிலையத்துக்கு

(17ஆம் பக்கம் பார்க்க)

# உத்தராகண்ட்டில் வன்முறை: 2 பேர் பலி; 100 பேர் காயம்!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீ வைக்க முயன்றனர். அப்போது பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் இருந்தனர். என்றாலும் கலவரக் காரர்களின் முயற்சியை தடுத்தனர். கலவரக்காரர்களை காவல்நிலையத் துக்குள் நுழைய அனுமதிக்கப்பட வில்லை. அதனைத் தொடந்து கலவரம் பந்தல்பூரா பகுதிக்கு அருகில் உள்ள காந்தி நகருக்கு பரவியது. தற்போது நிலைமை கட்டுக்குள் உள்ளது. பக்கத்து இடங்களுக்கு பரவாமல் தடுக்கப் பட்டுள்ளது. துணை இராணுவப்படையும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.” - என்றார்.

மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் பிரகலாத் மீனா கூறுகையில்,

“மதரஸாவும், மசூதியும் அரசு நிலத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்டது, நீதிமன்ற உத்தரவு படி, பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் ஆக்கிரமிப்புகளை அகற் றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.” - என்றார்.

உத்தராகண்ட் மாநிலத்தின் ஹல்த்வானி பகுதியில் ஆக்கிரமித்து சட்டவிரோதமாக கட்டப்பட்டு இருந்த மதரஸாவை அகற்றும் பணியை மாவட்ட நிர்வாக அதிகாரிகள் குழுவினர் வியாழக்கிழமை மேற்கொண்டனர். அதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பொலிஸாருக்கும், உள்ளூர் மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தொடர்ந்து ஆக்கிரமிப்பை அகற்ற வந்த அரசு அதிகாரிகள் மீது கற்களை வீசியும், பொலிஸ் நிலை யத்தை முற்றுகையிட்டு தாக்குதலும், வாகனங்களுக்கு தீயும் வைக்கப்பட் டன.

அங்குள்ள பன்பூல்புரா பகுதியில் சுமார் 2 கிலோ மீற்றர் பரப்பிலான ரயில்வே துறைக்கு சொந்தமான நிலத் தில் வசித்து வரும் இஸ்லாமிய மக்களை அங்கிருந்து வெளியேற ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து போராடிய மக்கள், சட்டப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கு விவகாரம் உச்சநீதிமன் றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை நடைபெற உள்ளது. இதை மாவட்ட நிர்வாக அதிகாரிகளிடம் தெரிவித்துள் ளனர். இருந்தும் அவர்கள் சட்டவிரோத ஆக்கிரமிப்பை அகற்றினர் என தெரி விக்கப்படுகிறது.



# நாடாளுமன்றத்தை முற்றுகையிட திரண்ட உத்தரப் பிரதேச விவசாயிகள்

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த விவ சாயிகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி நாடாளுமன்றத்தை முற்று கையிட திரண்ட நிலையில், அவர்கள் நொய்டாவில் தடுத்து நிறுத்தப்பட்ட னர்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் நாடாளுமன்றத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட உழவு இயந்திரம் , பஸ் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் புறப்பட்டனர்.

பாரதிய விவசாயிகள் நலச் சங்கத் தைச் சேர்ந்த இவர்கள் பல்வேறு மாவட் டங்களில் இருந்து புறப்பட்டு நொய் டாவில் உள்ள மகாமாயா மேம்பாலத்தை சென்றடைந்தனர். அங்கிருந்து அவர் கள் நாடாளுமன்றத்தை நோக்கி பேர ணியாகச் செல்ல முயன்றனர்.

அப்போது, மேம்பாலம் அருகே அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். அங்கு போடப்பட்டிருந்த தடுப்புகள் மீது ஏறி கீழே குதித்து பேரணியைத் தொடர விவசாயிகள் முயன்றனர். எனினும், பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத் தினர். இதற்காக அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.





# ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு: அவசரகால நிலை பிரகடனம்

ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு காரணமாக, அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அனர்த்தம் காரணமாக மக்களுக்கு சுடு நீரை விநியோகிக்கும் பல குழாய்கள் சேதமாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொதுமக்கள் சுடுநீர் மற்றும் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதத்திற்கு பின்னர், ஐஸ்லாந்தில் மூன்றாவது முறையாக எரிமலை வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சுடுநீர் கிடைக்காத பகுதிகளில் உள்ள பாடசாலைகளும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலை நீடிக்குமாயின் 30 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் சுடுநீர் இன்றி பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உடனடியான மனிதாபிமான உதவிகள் ஐஸ்லாந்துக்கு தேவைப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# ஹவுதி போராளிகளின் இலக்குகள் மீது அமெரிக்கா மீண்டும் விமானத் தாக்குதல்

யேமனில் உள்ள ஹவுதி போராளிகளின் இலக்குகள் மீது அமெரிக்கா மீண்டும் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது.

அதன்படி பாதுகாப்பு நடவடிக்கையாக ஹவுதி போராளிகளுக்கு சொந்தமான மாலுமிகள் இல்லாத நான்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன், செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த தயாராக வைக்கப்பட்டிருந்த 7 ஏவுகணைகளை தாக்கி அழித்ததாகவும் அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.



மேலும், செங்கடலில் பயணிக்கும் சர்வதேச வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி போராளிகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனால், சர்வதேச வர்த்தக கப்பல் போக்குவரத்து பாதிப்படைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனின் இரும்புத் தளபதியை பதவி நீக்கினார் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி



இரும்புத் தளபதியென அழைக்கப்பட்ட உக்ரைனின் ஆயுதப்படை தலைமை தளபதியான வலேரி ஜலுன்ஸ்யியை அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

கடந்த சில நாள்களாக ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கும் தளபதி வலேரி ஜலுன்ஸ்யிக்கும் இடையே ஏற்பட்டுவந்த மோதல் காரணமாகவே அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவுடனான போரின் போது சிறப்பாக செயற்பட்டமைக்காக வலேரி ஜலுன்ஸ்யி இரும்புத் தளபதியென அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.